ESTD.2010

ISSN 0976-5417

# Crossian Resonance

## A Multidisciplinary Research Journal

(A Refereed Biannual Published in June and December)

Vol. 1 No. 2 Dec. 2010

HOLY CROSS COLLEGE
(Autonomous)
Centre for Multidisciplinary Research
NAGERCOIL
TAMIL NADU, INDIA

# EDITORIAL BOARD

*Chief Editor* : **Dr. Sr. Gerardin Jayam**

*Editors* : **Dr. J. Elizabeth Lucy, Dr. S. Jaya Suriya**

*Advisory Members*

**Dr. James R.Daniel,** Former Principal, Scott Christian College (Autonomous), Nagercoil-629004
**Dr. M. Jayalakshmi,** Dept. of Immunology, Madurai Kamaraj University, Madurai-625021
**Dr. Sr. Basil Rose,** Secretary, Holy Cross College (Autonomous), Nagercoil-629004
**Dr. Sr. Rosalie,** Controller of Examinations, Holy Cross College (Autonomous) Nagercoil-629004

*Committee Members*

**Dr. V. Hermana Gilt Arachi**
**Dr. S. Stella Bai**
**Dr. Sr. Sophy**
**Dr. T.R. Nirmala Vasantha**
**Dr. G. Leema Rose**
**Dr. S. Regi**
**Dr. C. Nirmala Louis**
**Dr. Jespin Ida**
**Sr. Sahaya Selvi**
**Dr. Shyla Suganthi**

# AIM AND SCOPE

*Crossian Resonance,* the multi-disciplinary peer-reviewed refereed journal strives to reach research scholars from all directions as well as various cross-sections of society and provides platform to resonate scientific findings to foster the spirit and aspirations of the academics and to promote research culture among the erudite. The initiative has seen the realization and fruition of the long-dreamt intellectual baby- the first issue of this journal.

This issue has provided opportunity and space to the Crossian scholars, lecturers and research guides of our institution. This little yet vibrant reverberation of intellectual sharing will definitely regenerate new knowledge and ignite and unleash power to re-search within the visionary researchers - scholars, guides, experienced lecturers/professors- hailing from Universities and Colleges belonging to various branches of Arts and Sciences all over the world.

*Crossian Resonance* strives to keep up the standard from the first issue and all the papers published in this issue were assessed by competent referee editors and were recommended for publication. This journal is committed to the development and regeneration of the nation with the scope of providing an open and common platform to launch a united vision and empowerment of innovative knowledge.

May this new beginning spring up, root, spread, grow and remain evergreen like an olive tree to create renewed awareness, dimensional consciousness and enlightenment. May the efforts of the editors and the editorial board be rewarded with prosperity and continued success.

Dear contributors, we look forward to your active participation and earnest support to sustain the quality of the journal.

**– *Chief Editor***

VOLUME - 1 NUMBER - 2 DECEMBER 2010

## CONTENTS


Search for an Indian Identity in Vikram Seth's A Suitable Boy - **R. Eveline Shindya** 1 - 8

Survival of the Subalterns in Aravind Adiga's The White Tiger: A Postcolonial Perspective
- **Virgin Nithya Veena, V.** 9 - 15

மங்கையருள் மாணிக்கம் மாதவி - **முனைவர். ஜா. ஜாக்குலின் ஜேசுலெட்** 16 - 18

நாஞ்சில்நாட்டு கல்வெட்டுகளில் ஆய்மன்னர்கள் - **G. புஷ்பராஜ், S. ரெஜி** 19 - 25

Problems of Paddy Cultivators in Thuckalay Block, Kanyakumari District
- **Anne Perpet Sophy** and **S.Jeni Sanjana** 26 - 31

An Economic Study of Women Domestic Workers in Nagercoil Municipality- **D.G.M. Victoria** 32 - 37

Stress Management - **S. Sahayaselvi** and **S.Jesi Isabella** 38 - 43

Effect of Microwave Radiation on Zinc Sulphide Nanoparticles
- **V.Shally, M.Priya Dharshini** and **Sr.Gerardin Jayam** 44 - 47

Growth and Characterization of KDP Crystals with EDTA as additive
- **R. Krishna Priya** and **S. Mary Delphine** 48 - 52

Studies on Epoxy/Zinc Oxide Nanocomposite
- **A.Lesly Fathima, Y.Ruban** and **Sr.Gerardin Jayam** 53 - 60

Studies on Electro-Deposited Cuprous Oxide Thin Films Doped with Potassium
- **A. Sybil Emarance, D.E. Jain Ruth** and **Sr. Gerardin Jayam** 61 - 68

Structural And Optical Characterization of ZnS/MnS, MnS/ZnS, ZnS/PbS and PbS/ZnS Core/Shell Nanostructures
- **M. Priya Dharshini, D.E. Jain Ruth** and **Sr. Gerardin Jayam** 69 - 77

Studies on Barium Mixed Strontium Tartrate Crystals - **M. Mary Freeda** and **S. Mary Delphine** 78 - 81

Band Structure, Density of States, Structural Phase Transition And Metallization of KCl Under Pressure - **A.Mahmood Sabitha** and **C. Nirmala Louis** 82 - 87

Growth and Characterization of Urea Doped Crystal - **T. Ananthi, S. Mary Delphine** 88 - 93

Studies on the estimaton of phytochemicals and antioxidant activity of amla (Phyllanthus emblica) - **Jenitta Dinesh** 94 - 99

Impact of tsunami on the availability of marine commercial fishes in Kanyakumari District
- **Jeni Chandar Padua** and **Sr. Basil Rose, M.R** 100-106


*Printed and published by Crossian Publication*

# நாஞ்சில்நாட்டு கல்வெட்டுகளில் ஆய்மன்னர்கள்

*G. புஷ்பராஜ், **S. ரெஜி
* ஆய்வாளர்
**விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, திருச்சிலுவைக்கல்லூரி, நாகர்கோவில்

## முன்னுரை

தமிழக வரலாற்றின் தொடக்க காலம் சங்ககாலம் எனப்படும். சங்ககாலத்தில் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களும் பல சிற்றரசர்களும் ஆட்சி செய்தனர்.[1] இக்காலத்தில் கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகளைக் குறிப்பாக நாஞ்சில் நாட்டுப் பகுதிகளை, ஆய் மரபில் வந்த குறுநில மன்னர்கள் ஆட்சி செய்தனர். இது குறித்து மிகக் குறைவான, ஆனால் நம்பத்தகுந்த கல்வெட்டுச் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் கிடைத்துள்ளன. நாஞ்சில் நாட்டை ஆண்ட சங்ககால ஆய் மன்னர்கள் பரம்பரை குறித்துப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. மௌரியப் பேரரசர் அசோகரின் கல்வெட்டு ஆய் அரசரை "ஹித ராஜா"[2] எனக் குறிக்கிறது என்பது ஒரு கருத்து. இதற்கு இடையரசர், ஆயரசர் எனப் பொருள் கொள்ளப்படுகின்றன.

பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி ஆய் மன்னர் பரம்பரையினரும், வேளிரும் ஒருவரே எனக் கருதுகிறார். இவர்கள் வட நாட்டிலுள்ள யது குல சத்திரியர்கள் என்றும், யாதவ சமூகத்தினர் என்றும் கூறுகிறார். பேராசிரியர் ஸ்ரீதரமேனன் ஆய் மன்னர்கள் வட நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பது கற்பிக்கப்பட்ட கதை என்கிறார். சேர, சோழ, பாண்டியரைப் போலவே இவர்களும் திராவிட மரபினரே என்கிறார்.

## ஆய் நாட்டின் எல்லை

"பெரிப்ளூஸ் ஆஃப் எரித்திரியன் கடல்" என்ற நூலின் (Periplus of Erythrean Sea) ஆசிரியர் (கி.பி.81-கி.பி.96) நெல்சிண்டாவிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள இடங்களைப் பாண்டியர்கள் ஆட்சி செய்ததாகக் குறிப்பிடுகிறார்.[3] இங்குக் குறிப்பிடப்படும் நெல்சிண்டா என்ற இடம் கொல்லம் மாவட்டத்தில் உள்ள நீண்டகரை ஆகும். கி.பி.140-ல் தென்னிந்தியக் கடற்கரையில் பயணம் செய்த தாலமி (Ptolemy) என்ற கிரேக்கப்பயணி ஆய் அரசர்களின் நாடு கன்னியாகுமரியிலிருந்து "பெட்டிகோ" மலை (Bettigo Mountain) வரை இருந்ததாகக் கூறுகின்றார்.[4] இங்கு குறிப்பிடப்படும் "பெட்டிகோ" என்பது பொதிகை மலை என்கின்றனர் வரலாற்றாசிரியர்கள். இதனால் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் ஆய்நாடு பாண்டிய நாட்டுக்கும், சேர நாட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்திருக்க வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டைக்கு அருகிலிருக்கும் ஆய்குடி என்னும் ஊர் ஆய் மன்னர்களின் தலைநகரமாயிருக்க வேண்டுமென வி.வி. சாமிநாத அய்யர் கருதுகிறார்.[5] ஆனால் சாமிநாத அய்யரின் கருத்துக்களைக் கோபிநாத ராவ் அவர்கள் ஏற்க மறுக்கிறார். ஏனெனில் ஆய்குடியில் எந்த அரண்மனையோ, கோட்டையோ இருந்ததற்கான அறிகுறி எதுவுமே தென்படவில்லை. எனவே அதனை ஆய் மன்னர்களின் தலைநகராக ஏற்க இயலாது என்கிறார் ராவ் அவர்கள். ஏனைய வரலாற்றாய்வாளர்களால் இவ்வாதம் மிகவும் பலவீனமானதாகவே கருதப்படுகிறது. ஏனெனில் ஓரிடத்தில் அரண்மனை இல்லை என்பதற்காக அதனைத் தலைநகராக ஏற்க இயலாது என்று கூறுவதற்கில்லை.[6] ஏனெனில் காலப் போக்கில் அந்நினைவுச் சின்னங்கள் எல்லாம் பாழ்பட்டு அழிந்து

போயிருக்கக் கூடும் என்பது அவர்தம் கருத்து. அதற்கு எடுத்துகாட்டாக அவர்கள் பூம்புகாரையும், கரூரையும் கூறுகின்றனர். ஏனெனில் இங்கும் அரண்மனையோ அல்லது வேறு எந்த விதமான புராதன நினைவுச் சின்னங்களோ இல்லாத பொழுதிலும் வேறு பல ஏற்றுக் கொள்ளத்தக்க பிற காரணகாரியங்களினால் இவ்விரு இடங்களும் தலைநகர்களாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன.

சங்ககால ஆய்நாடு கன்னியாகுமரியிலிருந்து தென்திருவல்லா வரை இருந்தது என்றும், கன்னியாகுமரி முதல் பம்பை ஆறுவரை இது பரந்து கிடந்தது என்றும் பல கருத்துக்கள் உள்ளன.தாலமியின் பயணக்குறிப்பும், பிளினி நூலும் குறிப்பிடும் ஆய் நாட்டில் கொட்டியரா என்பது இன்றைய நாகர்கோவிலின் ஒரு பகுதியான கோட்டாறுதான் என்று இலங்கைத் தமிழறிஞர் கனகசபைப் பிள்ளை கூறுகின்றார். பாண்டி நாட்டின் தென்பகுதியில்தான் ஆய்நாடு இருந்தது என்பதற்கு ஆய்க்குடி, ஆயிரவேலி, ஆயூர், இடைக்காடு, அந்தயக்குடி என்னும் ஊர்ப்பெயர்களைக் கூறி உறுதிப்படுத்துகின்றனர். இதில் ஒட்டு மொத்தமான உண்மை இன்றைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகள் ஆய் மன்னர்களின் கீழ் இருந்தது என்பதுதான். சங்க காலக் குமரிமாவட்ட மன்னர்களாக ஆய் அண்டிரன், திதியன் 1, திதியன் 2, அதியன் ஆகிய நால்வரின் பெயர்கள் கிடைக்கின்றன.

**ஆய் அண்டிரன் (கி.பி. 1 - கி.பி. 25)**

குமரிமாவட்டத்தின் பல பகுதிகளை ஆண்டு வந்த ஆய் மன்னர்களுள் முதல் அரசன் ஆய் அண்டிரன் ஆவான். இவன் வேள், ஆய்மாவேள் என்றும் அழைக்கப்படு-கிறான். ஆய் அண்டிரனின் நாடு பொதிய மலையைச் சுற்றி இருந்தது.[7] இன்றைய கன்னியாகுமரி மாவட்டமும், தாமிரபரணி ஆறு வரையுள்ள தென்பாண்டிப் பகுதிகளும் இவனது ஆளுகையின் கீழ் இருந்தன. ஆய் மன்னர்களைப் பற்றியும், அவர்களது ஆட்சி முறை பற்றியும் ஒரு தெளிவான இறுதி முடிவுக்கு வர சங்க இலக்கியங்கள் பயன்படுகின்றன. அவற்றுள் முக்கியமான தகவல் புறநானூற்றிலிருந்து பெறப்படுகிறது. அதில் புறநானூற்று உரையாசிரியர் அவ்வை துரைசாமிப் பிள்ளை, குட்டுவன் கீரன் என்பவரின் பாடல் மூலம் ஆய் அண்டிரன் முதல் ஆய் அரசன் என்பதை நிறுவி உள்ளார்.

எது எப்படியாயினும் ஆய் மன்னர்களில் பலம் பொருந்திய தலைவனாக ஆய் அண்டிரன் அறியப்படுகிறான். இம்மன்னன் பல தமிழ்ப் புலவர்களை ஆதரித்துள்ளான். அவர்களுள் முடமோசியார், குட்டுவன் கீரனார் ஓடைக்கிழார் ஆகியோர் சிறப்பானவர்களாகக் கருதப்படுகின்றனர். இப்புலவர்கள் இவ்வரசனைப்பற்றிப் பாடல்கள் பல இயற்றியுள்ளனர்.

சமகாலத்தவரான காரைக்-கண்ணனார் எனும் புலவரும் நற்றிணையில் மன்னன் ஆய் அண்டிரனைப் பற்றி எழுதியுள்ளார். இவ்வேந்தன் கி.பி. 1 ஆம் ஆண்டு முதல் கி.பி. 25 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்ததாகத் தமிழ் அறிஞர் கே.என். சிவராசபிள்ளை குறிப்பிடுகிறார்.[8] ஆய் அண்டிரன் இறந்த போது முடமோசியார் இவன் வலிமையான தேரை இரவலர்க்கு ஈந்தவன், இவன் இறந்ததும் இவனது உரிமை மகளிரும் அவனுடன் ஈமத்தீயில் பாய்ந்து உயிர்விட்டனர் என்கிறார்.

**4.3 முதலாம் திதியன் (கி.பி. 25 - கி.பி. 50)**

ஆய் அண்டிரனை அடுத்து நமக்குத் தெரிய வரும் ஆய் மன்னன் முதலாம் திதியன் ஆவான்.[9] இவனைப்-பற்றிச் சங்க இலக்கியங்களில் பல குறிப்புகள் உள்ளன. குறிப்பாகப் பூதப்பாண்டியன் என்னும் பாண்டிய மன்னர் இம்மன்னனைப் 'பொதியில் செல்வன்' என்று குறிப்பிடுகிறார். சங்கப்புலவர் கபிலர் அகநானூற்றில் இவ்வேந்தனைக் குறிக்கும் போது,

"ஔிறு வேல் தானைக் கருந்தேர்த் திதியன்"

என்றும்

"முயலுநர் முற்றா ஒற்று அருநெடுஞ்
சிமைப் புகலரும் பொதியில்"

என்றும் இவனது ஆட்சிக்குட்பட்ட பகுதியை வருணிக்கிறார்.[10]

கே. என். சிவராச பிள்ளை அவர்களும் ஆய் அண்டிரனுக்குப் பிறகு திதியனே ஆய் நாட்டின் மன்னனாகத் திகழ்ந்தான் எனக் குறிப்பிடுகிறார்.[11] மன்னர் பூதப்பாண்டியன் தன் கவிதைகளில் இம்மன்னன் பெரும் நிலப்பரப்பை ஆட்சி செய்ததாகவும், அப்பகுதி மலை சார்ந்த இடமாக இருந்தது என்றும் குறிப்பிடுகிறார்.[12] முடமோசியார் என்னும் கவிஞர் இவ்வரசனைச் சிறப்புற தமது கவிதைகளில் குறிப்பிட்டுச் சொல்வது இந்த அரசனின் பெருமையையும், திறமையையும் எடுத்துக் காட்டுகின்றன. பூதப்பாண்டியன் தமது கவிதைகளில் இம்மன்னனைப் பற்றி பாடுவதால் அம்மன்னன் வாழ்ந்த காலத்திலேயே திதியனும் வாழ்ந்து இருக்கலாம் எனக் கருதுவதில் தவறு ஏதும் இல்லை. அதாவது இருவரும் சமகாலத்தவரே. இவரைப்பற்றி முனைவர் கே.கே. பிள்ளை மற்றும் சிவராச பிள்ளை போன்றோர் விரிவான ஆய்வு செய்துள்ளனர். கே. கே. பிள்ளை இந்த மன்னனைப் பற்றிப் பூதப்பாண்டியனின் நாட்டின் மேற்கெல்லையாகப் பூதப்பாண்டி (தோவாளை வட்டம்) இருந்தது என்றும், பிற பகுதிகள் திதியனிடம் இருந்தன என்றும் கூறுகிறார். அறிஞர் கே. என். சிவராச பிள்ளை அவர்களின் கருத்துப்படி ஆய் அண்டிரனுக்குப் பிறகு அடுத்த மன்னன் திதியன் என்பதுவும், அம்மன்னன் கி.பி. 25 முதல் கி.பி. 50 வரை ஆட்சி செய்ததாகவும் தெரிகிறது[13].

**அதியன் (கி.பி. 50 - கி.பி. 75)**

திதியனுக்கு அடுத்து அவர் மகன் அதியன் ஆட்சி பீடத்திற்கு வந்ததாகவும், இம்மன்னன் கி.பி. 50 முதல் கி.பி. 75 வரை ஆய் நாட்டைச் சீரோடும், சிறப்போடும் ஆட்சி செய்தார் என்றும் கே. என். சிவராச பிள்ளை குறிப்பிடுகிறார்.[14] இவ்வரசன் பசும்பூண் பாண்டியனை வென்றதாகப் புறநானூற்றில் வரும் கருத்தை மேற்கோளாகக் காட்டி அவனது ஆட்சியின் சிறப்பையும் தமது நூலில் குறிப்பிடுகிறார்.[15] மேலும் இவ்வரசனின் நினைவாக அதியனூர் என்ற ஊர் குமரி மாவட்டத்தில் உள்ள அழகிய பாண்டியபுரம் என்னும் ஊரினருகே உள்ளதாகக் குறிப்பிடுகிறார். ஆனால் வரலாற்றுப் பேராசிரியர் கே. கே. பிள்ளை இக்கருத்திற்கு மாறாக அதியனூர் என்பது அழகிய பாண்டியபுரத்தின் பழைய பெயர் என உரைக்கிறார்.[16] எது எவ்வாறு எனினும் இந்த அரசன் அழகியபாண்டியபுரம் அண்மையிலுள்ள பொதிய மலைச் சாரலில் தன் ஆட்சியைச் செம்மையாகப் புரிந்தான் என்பதில் தவறு ஒன்றுமில்லை.

**இரண்டாம் திதியன் (கி.பி.75 - கி.பி.125)**

அதியனை அடுத்து ஆய்நாட்டின் மன்னனாகத் திகழ்ந்தவன் இரண்டாம் திதியன் ஆகும். இவர் காலத்தின் சிறப்பு யாதெனின் தலையானங்கானத்தில் பாண்டியர்களுக்குள் நடந்த போரில் தன்னை ஈடுபடுத்தி, அந்தப் போர் முடிவதற்கு முக்கிய காரணமாக இருந்த மன்னர் என்பது குறிப்பிடத்தக்கது. பாண்டிய மன்னனாகிய மூன்றாம் நெடுஞ்செழியனை வென்று அவனது நிலப்பரப்பைக் கைப்பற்ற இம்மன்னன் முயற்சித்தான் என்பதுவும் இங்கு நினைவுகூரத்தக்கது. இவ்வரசனுடைய ஆட்சிக்காலம் அறிஞர் கே. என். சிவராச பிள்ளைக்கருத்துப்படி கி.பி. 75 முதல் கி.பி. 125 வரை என்பதாகும். ஆனால் கே. என். நீலகண்ட சாஸ்திரி இம்மன்னன் கி.பி. 210 வரை ஆண்டான் என்று குறிப்பிட்டுள்ளார்[17].

தலையானங்கானத்துப் போருக்குப் பின்பு கன்னியாகுமரி மாவட்டத்தின் பெரும்பான்மையான பகுதிகள் இவ்-

வேந்தனின் கீழ் இருந்ததாகவும், இவனுடைய பேரரசு வளம் நிறைந்த ஒன்றாகக் காட்சி அளித்ததாகவும், தாலமி என்னும் கிரேக்கப்பயணி கூறுவது இங்குக் கருதத்தக்கது. அவருடைய கருத்துப்படி இந்த அரசனின் நிலப்பரப்புத் தென்திரு-விதாங்கூர் முழுவதும் பரவி இருந்ததை அறியலாம்.[18]

**நாஞ்சில் பொருநன் (கி.பி.150 - கி.பி.175)**

இரண்டாம் திதியனை அடுத்து ஆய் குறுநில மன்னர்களுள் ஒருவனாகிய நாஞ்சில் பொருநன் அரியணை ஏறினார். இவர் காலத்தைப் பற்றிச் சங்க புலவர்களான ஒருசிறைப் பெரியனார், மருதன் இளநாகனார், ஔவையார், கருவூர்க் கதப்பிள்ளை முதலானோர் சிறப்பித்துப் பாடி-யுள்ளனர். ஒருசிறைப் பெரியனார் நாஞ்சில் வள்ளுவனைச் 'செவ்வரைப் படைப்பை நாஞ்சில் பொருந'[19] என்றும் மருதன் இளநாகனார் 'உயர் சிமைய உழாஅ நாஞ்சில் பொருந'[20] என்றும், ஔவையார் 'நடநிலைப் பலவின் நாஞ்சில் பொருநன் மடவன்' என்றும்[21] கருவூர்க் கதப்பிள்ளை 'தீஞ்சுவைப் பலவின் நாஞ்சில் பொருநன்' என்றும்[22] அடைமொழி கொடுத்துப் பாராட்டுகின்றனர். புறநானூற்று உரையாசிரியர் இம்மன்னனை நாஞ்சில் வள்ளுவர் என்று குறிப்பிடுகிறார். ஆனால் இவருடைய இயற்பெயர் கந்தன் என்பதாகும். பொருநன் என்ற சொல்லின் பொருள் மன்னன் என்பதாகும். அது குடும்பப் பெயராக இருக்கும் எனத் தோன்றுகிறது. இவ்வரசனைக் குறித்துப் பல்வேறு கருத்துகள் சரித்திர ஆசிரியர்களால் கூறப்படுகிறது. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பேராசிரியர் சாமிநாத ஐயரும், கனகசபைப் பிள்ளையும் முனைவர். கே.கே. பிள்ளையும் ஆவர்.

பொருநன் என்பது நாஞ்சில் நாட்டு வேளிரின் குலப்பெயர் என்று புறநானூற்றின் பழைய உரையாசிரியர் கூறுவதைக் கனகசபைப் பிள்ளை எடுத்துக்காட்டுகிறார். எனவே நாஞ்சில் பொருநன் ஆய் மரபினனே என்பது அவரது கருத்து. நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய ஔவையார் கி.பி. 3 ஆம் நூற்றாண்டினர் என்பது கே.கே. பிள்ளையின் கருத்து. ஔவையாரின் வழிபாடு நாஞ்சில் நாட்டில் அழகிய-பாண்டியபுரத்திலும் இவ்வூரைச் சுற்றிய இடங்களிலும் இருப்பதையும் சுட்டிக்-காட்டுகிறார்[23] அவர். கி.பி. 150 முதல் கி.பி 175 வரை குமரியின் பெரும்பகுதி இந்த அரசனின் ஆட்சிக்குள் இருந்தது என்பது கே.என். சிவராஜ பிள்ளை என்பவருடைய கருத்தாகும்.

**பிற்கால ஆய் மன்னர்கள்**

ஆய் மன்னர்களில் முற்கால மன்னர்களுள் கடைசி மன்னனாம் நாஞ்சில் பொருநனுக்குப் பிறகு பிற்கால ஆய் மன்னர்களைப் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அவர்களைப் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்-களில் காணலாம். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சடையனும், அவன் மகன் கருநந்தனும் ஆகும். இந்த இரு ஆய் மன்னர்களைக் கழுகு மலைக் கல்வெட்டு குறிக்கிறது. இவர்கள் இருவரும் கி.பி. 8-ம் நூற்றாண்டின் இறுதியில் விழிஞத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர்கள்.[24] ஜடில பராந்தகன் (கி.பி. 765-805) என்ற பாண்டிய மன்னன் இவர்களுடன் போரிட்டிருக்கிறான். சென்னை அருங்-காட்சியகச் செப்பேடு இப்போரைக் குறிக்கிறது. ஆய் மன்னனை வேள், ஆய் என்றே குறிக்கிறது இச்செப்பேடு. பாண்டியன் ஆய் மன்னர்களின் செல்வங்களையும், குதிரை, யானை-களையும் கொள்ளையடித்ததாக இது குறிப்பிடுகிறது. இப்போரில் சடையன் இறந்ததாகவும், அவன் மகன் கருநந்தடக்கன் பாண்டியனுடன் போரிட்டதாகவும் இச்செப்பேடு தெரிவிக்கிறது. இப்போர் அருவிக்-கோட்டையில் (இன்றைய அருவிக்கரை) நடந்தது. இவ்வூரும் இப்போரில் எரிக்கப்பட்டது.[25]

கி.பி.8,9,10-ஆம் நூற்றாண்டுகளில் குமரி மாவட்டம் முற்காலப் பாண்டியரின் ஆளுகைக்குட்பட்டுப் பாண்டி மண்டலமாக மாறிய கால கட்டத்தில் இவ்விரு ஆய் மன்னர்களும் ஆய்நாட்டின் சில பகுதிகளை ஆண்டு வந்ததைக் கல்வெட்டு, செப்பேடுகள் உணர்த்துகின்றன.

**கருநந்தடக்கன் (கி.பி. 857 - கி.பி. 885)**

கி.பி. 857-இல் கருநந்தடக்கன் ஆட்சிக்கு வந்தான் என்று பேராசிரியர் குஞ்சன் பிள்ளை குறிப்பிடுகிறார்.[26] இந்த மன்னனுடைய ஆட்சி வடக்கே திருப்பரப்பு முதல் தெற்கே கன்னியாகுமரி வரை பரந்து இருந்தது என்பதையும் குறிப்பிடுகிறார். மேலும் கன்னியாகுமரி, சுசீந்திரம், கோட்டாறு, நாகர்கோயில், குளச்சல், முஞ்சிறை, திருவட்டாறு முதலிய பகுதிகள் இம்மன்னரது ஆட்சியின் கீழ் இருந்த முக்கிய இடங்களாகும்.[27] இவ்வேந்தன் காலத்தில் ஆய் அரசின் தலைநகரம் விழிஞமாக இருந்தது என்றும் அவர் குறிப்பிடுகிறார். இம்மன்னன் விளவங்கோடு வட்டத்தில் முஞ்சிறை அருகே பார்த்திவசேகரபுரம் என்ற ஊரை அமைத்து, விஷ்ணு கோயில் ஒன்றை எடுப்பித்து, அங்குக் காந்தளூர்ச் சாலையைப் போன்ற ஒரு சாலையை நிறுவினான். அதில் 95 சட்டர்கள் இருந்தனர் என இவ்வரசனின் செப்பேடு (கி.பி. 864-65) தெரிவிக்கிறது.[28] கருநந்தடக்கனின் 22-ஆம் ஆட்சி-யாண்டுக் கல்வெட்டு (கி.பி. 879) திருவிடைக்கோடு மகாதேவர் கோயில் வெளிச்சுற்றிலுள்ள பாறையின் மீது வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.[29] அது திருவிடைக்கோடு மகாதேவர்க்குத் திருநந்தா விளக்கு (அணையா விளக்கு) ஒன்று அமைத்து நாள்தோறும் உழக்கு நெய் அளிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்ததைத் தெரிவிக்கிறது.

இவ்வேந்தனின் 14-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட மற்றுமொரு வட்டெழுத்துக் கல்வெட்டு திருவிடைக்கோட்டு மாதேவர்க்கு முதுகுளத்து வாணியன் புல்ல முருகன் என்பான் ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்கு நெய் அளிப்பதற்காக இருபத்தைந்து பசுக்கள் அளித்ததைக் குறிக்கிறது.[30] இதே கோயிலில் உள்ள கி.பி. 9-10-ம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு ஓமாய நாட்டு அரையனின் நினைவாக அந்நாட்டின் கிழவன் ஊர்வேளான் என்பான் திருவிடைக்-கோடு மாதேவர்க்குத் திருநந்தா விளக்கொன்று எரிப்பதற்கும், திருவமிர்துக்குமாக நிலமளித்ததை வெளிப்படுத்துகிறது.[31]

**விக்கிரமாதித்ய வரகுணன் (கி.பி. 885 - கி.பி. 925)**

கருநந்தடக்கனுக்குப் பிறகு விக்கிரமாதித்ய வரகுணன் கி.பி. 885-இல் அரியணை ஏறினான். இவன் சுமார் 40 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.[32] பாளையம் செப்பேட்டில் இவனைக் குறித்த செய்திகள் உள்ளன. இதில் தெங்க நாட்டுக் கிழவன் மகள் ஆய் குல மாதேவியான முருகன்சேந்தி (திருவடி சார்ந்த) நிலம் பல குடியாகச் சுட்டிக் கொடுத்தது குறிக்கப்பட்டுள்ளது. இம்மன்னனுடைய காலத்தில் சோழ மன்னர்களால் பாண்டியர்கள் தோற்கடிக்கப்பட்டு அவர்கள் ஆட்சி செய்த பகுதிகள் அனைத்துமே சோழ மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டது.[33] இவர் காலக் கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்களை ஆய்வு செய்ததில் இவ்வரசன் மதசார்பற்ற ஒருவராகத் திகழ்ந்தார் என்பதும், புத்த மதத்திற்கு ஆதரவு கொடுத்துப் புத்த மதம் கேரளத்திலும், குமரியின் தென்-பகுதியிலும் பரவுவதற்குக் காரணமாக இருந்தார் என்பதும் தெரிகின்றது. மேலும் இவர் கேரளாவில் உள்ள திருநில்லாபதம் என்னும் கோவிலுக்கு நன்கொடை கொடுத்த செய்தி[34] கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டத்திலுள்ள சிதறால் பக்கத்திலுள்ள திருச்சாரணத்து மலையில்[35] உள்ள கல்வெட்டிலிருந்து அறியமுடிகின்றது.

**முடிவுரை**

சங்ககாலம் முதல் 10 ம் நூற்றாண்டு வரையில் ஆய் மன்னர்களைப் பற்றிய செய்திகள்

கிடைக்கின்றன. இக்காலத்துக்குப் பின்னர் ஆய் மன்னர்களின் குடும்பம் திருப்பாப்பூரில் ஒதுங்கிவிட்டது. இக்காலத்தில் காந்தளூரிலும், விழிஞத்திலும் சோழர்கள் செல்வாக்கடைந்து வந்ததைச் சோழர் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. ஆய் மன்னர்களின் கல்வெட்டுக்கள் 9-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இப்பகுதியில் கிடைக்கவும் இல்லை. கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இவர்கள் திருப்பாப்பூரில் இருந்து கொண்டு திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயிலின் நிர்வாகிகளாக மட்டும் இருந்தனர். அதோடு இக்காலங்களில் வேணாட்டு அரச வம்சதுடன் இவர்கள் கலந்துவிட்டனர்.

### அடிக்குறிப்புகள்

1. சீதாராம் குருமூர்த்தி, *கன்னியாகுமரி மாவட்டத் தொல்லியல் கையேடு*, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2008, ப. 5.
2. M.Gopala Krishnan, *Kanniyakumari District Gazetteer*, Madras, 1995, p. 54.
3. அ.கா. பெருமாள், *தென்குமரியின் கதை*, சென்னை, டிசம்பர் 2003, ப. 33.
4. *மேற்படி*, ப. 32.
5. T.A. Gopinatha Rao, *Travancore Archaeological Series*, Vol.1, Trivandrum, 1910, p. 188.
6. K.K. Pillay, *The Sucindrum Temple*, Madras, 1953, p. 13.
7. K.A. Neelakanda Sastri, *A History of South India*, Madras, 1976, p. 121.
8. K.N. Sivaraja Pillai, *The Chronology of the Early Tamils*, Madras, 1932, p.106.
9. சீதாராம் குருமூர்த்தி, *மேற்படி*, ப. 6.
10. அ.கா. பெருமாள், *மேற்படி*, ப. 35.
11. K.N. Sivaraja Pillai , op.cit. p. 118
12. K.K. Pillay, op.cit. p. 16.
13. K.N. Sivaraja Pillai, op.cit. p. 106.
14. Ibid.
15. நசை பிழைப்பறியா கழநொடி யதிகள் கோறை அறியாப் பயங்கெழு பலவின் வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய வில்கெழுதானைப் பசும்பூப் பாண்டியன் களிறணி வெல்கொடி கடுப்பக் காண்வர.
16. K.K. Pillay, op.cit. p. 17.
17. K.A. Neelakanta Sastri, op.cit. p.126.
18. K.K. Pillay, op.cit. p. 17.
19. *புறநானூறு*, வரி. 137.
20. *புறநானூறு*, வரி. 138-139.
21. *புறநானூறு*, வரி. 148.
22. *புறநானூறு*, வரி. 380.
23. K.G. Sesha Iyer, *Chera Kings of the Sangam period*, London, 1937, p. 121.
24. சீதாராம் குருமூர்த்தி, *மேற்படி*, ப. 8.
25. அ.கா. பெருமாள், *மேற்படி*, ப. 38.
26. P.N. Kunjan Pillai, *Sila Kerala Charitra Prasarangal (Mal)*, Part I, pp. 112-113.
27. A. Sreedhara Menon (ed), *Kerala District Gazetteers - Trivandrum District*, Trivandrum, 1962, p. 108.
28. T.A. Gopinatha Rao, *Op.cit.*, Vol. II and III, 1908, p. 198.
29. Ibid. p. 199.

30. சீதாராம் குருமூர்த்தி. மேற்படி, ப. 8.
31. மேற்படி.
32. M. Gopala Krishnan, op.cit. p. 61.
33. Ibid.
34. தமிழ்நாடு அரசு செய்திவெளியீட்டுத் துறை, செய்தி எண். 562/2004.

**References**


1. **Dr. N. Samraj,** Associate Professor, Department of History, Scott Christian College (Autonomous), Nagercoil. Cell 99949 08647

2. **Dr. Rajalingam,** Associate Professor, Department of History, S.T. Hindu College Nagercoil. Cell 94430 02753